<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : CC.No. 208/2018</u>

<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேமா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கல்லூத்து செட்டியார் | தொழில் | : | ஆசிரியர் |
| கிராமம் | : | சக்திநகர் | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 27.03.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தென்காசி சக்திநகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 16.08.2016 ம் தேதி, தென்காசியில் ஆடித்தவசிற்கு நானும், எனது கணவர் மாடசாமி மற்றும் எனது அப்பா ஆகியோர்கள் கோவிலுக்கு போய் தவசி காட்சியை பார்த்து விட்டு திரும்ப புதுபஸ்ஸ்டாண்டிற்கு பஸ்சில் வந்தோம். புது பஸ்ஸ்டாண்ட் வாசல் பக்கம் சென்னை சில்க்ஸ் அருகில் மாலை 06.30 மணிக்கு நானும், எனது கணவரும், எனது அப்பாவும் வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தோம். எனது அப்பா எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருக்கும் போது ரோட்டை கடக்க முயன்றபோது வடக்கிலிருந்து தெற்காக இருசக்கரவாகனம் பயங்கர வேகமாக அஜாக்கிரதையாக வந்து எனது அப்பா மீது இடித்தது. எனது அப்பா கீழே விழுந்து விட்டார். எனது அப்பாவிற்கு தலையின் பின்புறமும், இடது கண் புருவத்திலும் காயம் ஏற்பட்டது.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உதவியுடன் எனது அப்பாவை தென்காசி அரசு மருத்துவமனைக்கு நானும், எனது கணவரும் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு எனது அப்பாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு போகச் சொன்னார்கள். ஆனால் நாங்கள் எனது அப்பாவை திருநெல்வேலி காலக்ஸி தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். மறுநாள் காலை எனது அப்பா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். மறுநாள் நான் தென்காசி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அந்தபுகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன். சம்பவ நாளில் நான் விடுப்பில் இருந்தேன். அந்த காலக்கட்டத்தில் நான் செங்கோட்டை அரசு மகளிர் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்தேன். ஆடித்தவசு மாலை நேரம் நடைபெறும் என்றால் சரிதான். சாயங்காலம் 04.30, 05.00 மணியளவில் கோவிலுக்கு சென்றோம். சம்பவ காலக்கட்டத்தில் எனது அப்பா செங்கோட்டையில் குடியிருந்து வந்தார். என்னுடைய கணவர் மனோன்மணி பல்கலைக்கழகத்தில் Data Analylist ஆக வேலை பார்த்தார்.அவருக்கும் அன்றைய தினம் விடுமுறை. என்னுடைய கணவர் கோவிலுக்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் நாங்கள் சேர்ந்து தான் சென்றோம். நாங்கள் பயணம் செய்த பயண டிக்கெட்டை போலீசாரிடம் ஒப்படைத்தேனா? என்றால் இல்லை.

தென்காசி புது பஸ்ஸ்டாண்டிற்கு வடபுறம் தான் சக்திநகர் என்றால் சரிதான். தென்காசி - குத்துக்கல்வலசை மெயின்ரோட்டின் கீழ்புறம் என்னுடைய வீடு என்றால் சரிதான். நானும், என்னுடைய அப்பாவும், எனது கணவரும் 60 அடி தூரத்தில் இடைவெளி விட்டு நடந்து போய்க்கொண்டிருந்தோம். சக்திநகரில் உள்ள எங்கள் வீட்டிற்கு தான் போய்க்கொண்டிருந்தோம்.

என்னுடைய அப்பா திடீரென்று வலது புறத்திலிருந்து இடது புறம் ரோட்டை ஏன் கடந்தார் என்றால் கடையில் பழம் வாங்குவதற்காக சென்றார். சம்பவயிடத்தில் பழக்கடை வண்டி உள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயர், விபரங்கள் யார் சொன்னார்கள் என்றால் போலீசார் சொன்னார்கள். சம்பவ நேரத்தில் எத்தனை பேர்கள் கூடினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டதா? என்றால் நான் பார்க்கவில்லை.

எதிரியின் அஜாக்கிரதை மற்றும் அதிவேகத்தினல் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை திடீரென்று ரோட்டை கவனக்குறைவாக கடந்ததினால் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நஷ்டஈடு வழக்கு நிலுவையில் உள்ளது. நான் சொன்னது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.03.29 12:35:36 +0530

<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : CC.No. 208/2018</u>

<u>வழக்கு சாட்சி PW–2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாடசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குமரேசன் | தொழில் | : | System Analyist |
| கிராமம் | : | சக்திநகர் | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday of 27.03.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தென்காசி சக்திநகரில் குடியிருந்து வருகிறேன். நான் மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் System Analist ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் 8 வது மாதம், 16 ம் தேதி தென்காசியில் ஆடித்தவசு நடந்தது. ஆடித்தவசிற்கு நானும், எனது மனைவி மற்றும் எனது மாமனார் கல்லூத்து செட்டியார் ஆகியோர்கள் கோவிலுக்கு வந்து, ஆடித்தவசு முடித்து விட்டு புதுபஸ்ஸ்டாண்டிற்கு பஸ்சில் வந்தோம். பஸ்ஸ்டாண்டிலிருந்து வீட்டிற்கு செல்வதற்காக நடந்து போய்க்கொண்டிருந்தோம்.

மாலை சுமார் 06.45 மணி முதல் 06.50 மணிக்குள் நாங்கள் 3 பேரும் ரோட்டை க்ராஸ் செய்வதற்காக முதலில் எனது மாமனார் ரோட்டை ரிலையன்ஸ் பல்க்கிற்கு அருகில் கிராஸ் செய்தார். அப்போது நாங்கள் அவருக்கு ஒரு ஸ்டெப் பின்னால் சென்று கொண்டிருந்தோம். அப்போது வடக்கிலிருந்து தெற்காக இருசக்கரவாகனத்தை எதிரி பயங்கரமாக ஓட்டி வந்து எனது மாமனார் மீது இடித்து விட்டார். எனது மாமனார் கீழே

விழுந்தவுடன் தலையில் காயம் ஏற்பட்டது. உடலில் ஆங்காங்கு காயம் ஏற்பட்டது. அக்கம் பக்கம் உள்ளவர்கள் கூடி விட்டார்கள். மருத்துவமனைக்கு பொதுமக்கள் என்னுடைய மாமனாரை ஒரு ஆட்டோவில் ஏற்றிச் சென்றார்கள். நானும், எனது மனைவியும் வேறொரு ஆட்டோவில் சென்றோம்.

அங்கு முதலுதவி சிகிச்சை செய்து விட்டு மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். ஆனால் நாங்கள் திருநெல்வேலி காலக்ஸி தனியார் மருத்துவமனையில் எனது மாமனாரை சிகிச்சைக்கு சேர்த்தோம். மறுநாள் எனது மாமனார் இறந்து விட்டார். பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன். சம்பவ நாளில் நான் விடுப்பில் இருந்தேன். சாயங்காலம் 05.00 மணியளவில் கோவிலுக்கு சென்றோம். என்னுடைய மாமனார் எத்தனை மணிக்கு கோவிலுக்கு வந்தார் என்றால் அவருடன் சேர்ந்து தான் சென்றோம். சாமி கும்பிட்டு விட்டு பஸ் ஏறி புது பஸ்ஸ்டாண்டில் இறங்கி நடந்து வீட்டிற்கு சென்றோம். பஸ் டிக்கெட் போலீசாரிடம் கொடுக்கவில்லை. சம்பவயிடத்தில் கடைகள், பல்க் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் சுமார் 50 நபர்கள் கூடியிருப்பார்கள்.

எதிரியின் அஜாக்கிரதை மற்றும் அதிவேகத்தினால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் திடீரென்று ரோட்டை கவனக்குறைவாக கடந்ததினால் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நஷ்டஈடு வழக்கு நிலுவையில் உள்ளது. நான்

சொன்னது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.29 12:35:45 +0530